எரேமியாஸ் ஆகமம் 33:3

நம்மை நோக்கி அபயமிடு; நாம் உனக்குக் காதுகொடுப்போம்; நீ அறியாத பெரியனவும் நிச்சயமு மான சில விஷயங்களை உனக்கு அறிவிப்போம்.

பழமொழியாகமம் 14:29

பொறுமையாயிருக்கிறவன் மிகு விவேகத்தைக் காட்டுகிறான்; பொறாமையாயிருக்கிறவனோ வெனில் தன் மதியீனத்தை எடுத்துக் காட்டுகிறான்.

சங்கப் பிரசங்கியாகமம் 11:5

உயிராகும் விதம் இன்னதென் றும், கர்ப்பவதியினுதரத்தில் எலும்புகள் உருவாகும் விதம் இன்ன தென்றும் நீ அறியாதிருக்கிறது போலவே எல்லாவற்றையும் உண் டாக்கின தேவனுடைய கிரிகை களையும் நீ அறிவாய்.

பழமொழியாகமம் 21:2

மனிதனுடைய மார்க்கமெல் லாம் அவனுக்கு நேரானதாய்த் தோன்றுகின்றது;ஆனால் ஆண்டவர் இருதயங்களை நிறுத்துப் பார்க் கிறார்.

பழமொழியாகமம் 4:7

ஞானத்தைத் தேடுவது, ஞானத் தின் துவக்கமாம், உன் சொத்து அனைத்திலும் விமரிசையை அடைய முயலு.

சங்கீதங்கள் 32:8

பூமி முழுவதுங் கர்த்தருக்குப் பயப்படுவதாக! உலக வாசிகளெல் லாரும் அவருக்கஞ்சி நடுங்கக்கட வார்கள்.

கொரிந்தியர் 2 4:18

நாங்கள் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளையே நோக்கிக்கொண்டிருக்கிறோம்.

ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவை; காணப்படாதவை களோ நித்தியமானவை.

எபேசியர் 1:17

நம்முடைய கர்த்தராகிய சேசுக்கிறீஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமாயிருக்கிறவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்குரிய ஞானமும் தெளிவுமாகிய இஸ்பிரீத்துவின் வரங்களை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும்,

பழமொழியாகமம் 19:21

மனிதனின் இருதயத்தில் சிந்தனைகள் பலவாம்; ஆண்டவர் சித்தமோவெனில் நிலைபெற் றிருக்கும்.

தெசலோனிக்கேயர் 1 5:21-22

ஆனால் எல்லாவற்றையும் பரிசோதித்து, நலமானதைக் கைப்பற்றிக்கொள்ளுங்கள். தின்மையாகத் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.

சங்கீதங்கள் 119:130

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 19:26

சேசுநாதர் அவர்களைப் பார்த்து: மனிதராலே இது கூடாததுதான்; சர்வே சுரனாலோ எல்லாங்கூடும் என்றார்.

இசாயாஸ் ஆகமம் 55:9

பூமிக்கு வானமண்டலங்கள் துலையிட்டிருப்பதுபோல், நமது வழிகள் உங்கள் வழிகளுக்கும், நமது எண்ணங்கள் உங்கள் எண்ணங்களுக் கும் உயர்ந்திருக்கின்றன.

இசாயாஸ் ஆகமம் 40:28

கடவுள் பூமியின் எல்லைகளைச் சிருஷ்டித்த நித்தியரான தேவன் எனவும், அவர் இராச்சிய பாரத்தில் களைக்கிறதுமில்லை, உழைக்கிறது மில்லை; அவருடைய ஞானமோ புத்திக்கெட்டதாய் இருக்கின்றதென வும், நீங்கள் அறியீர்களோ? கேள்வி யுற்றதுமில்லையோ?

கொரிந்தியர் 2 10:3

ஏனெனில் நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்துக்கொத்தபடி போராடுகிறவர்களல்ல.

உரோமாபுரியார் 1 11:33

ஆ, தெய்வ ஞானம், அறிவு இவைகளின் திரவிய பொக்கிஷம் எவ்வளவோ ஆழமானது! அவருடைய நியாயத் தீர்ப்புகள் எவ்வளவோ புத்திக்கெட்டாதவைகளுமாய், அவருடைய வழிகள் எவ்வளவோ ஆராய்ந்தறியக்கூடாதவைகளுமா யிருக்கின்றன.

இயாகப்பர் பொது நிருபம் 1:13

எவனும் சோதிக்கப்படுகையில், சர்வேசுரனாலே நான் சோதிக்கப் படுகிறேனென்று சொல்லாதிருப்பா னாக. ஏனெனில் சர்வேசுரன் தின்மைக்குச் சோதிப்பவரல்ல. ஆகையால் அவர் எவனையும் சோதிக்கிறவரல்ல.

இசாயாஸ் ஆகமம் 45:9

களிமண்ணும், மட்பாத்திர முமான மனிதன் தன் சிருஷ்டிகருக்கு விரோதமாய் விவாதஞ் செய்வா னேல் அவனுக்குக் கேடாம்; களி மண் தன் குயவனை நோக்கி: நீ என்ன செய்கின்றாய், உன் வேலை திறமுள கரமற்றதெனப் புகல்வதுமுண்டோ? (எரே.18:6; உரோ. 9:20)

கலாத்தியர் 3:28-29

யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீன னென்றுமில்லை. ஆணென்றும் பெண் ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் சேசுக்கிறீஸ்துநாதரிடத்தில் ஒன்றாயிருக் கிறீர்கள். நீங்கள் கிறீஸ்துவினுடையவர்களானால், அபிரகாமுடைய வித்தாயும் வாக்குத்தத்தத்தின்படிக்குச் சுதந்திரவாளிகளுமாயிருக்கிறீர்கள்.

இராயப்பர் பொது நிருபம் 2 3:18

இஷ்டப்பிரசாதத்திலும் நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய சேசுக்கிறீஸ்துவை அறியும் அறிவிலும் வளர்ந்து வருவீர்களாக. அவருக்கே இப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாகக்கடவது. ஆமென்.

அர்ச். மாற்கு சுவிசேஷம் 9:35

ஓர் பிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி, அதை அரவணைத்துக்கொண்டு, அவர்களுக் குச் சொன்னதாவது;

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 3:3

சேசுநாதர் அவனுக்கு மறுமொழி யாக: ஒருவன் மறுபடியும் பிறவாதிருந் தால், சர்வேசுரனுடைய இராச்சியத்தைக் காணமாட்டானென்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (அரு. 1:13; 1 இரா. 1:23.)

சங்கீதங்கள் 90:4

அவர் தமது புஷஜங்களால் உனக்கு நிழலிடுவார்; அவர் சிறகு களின் அடைக்கலத்தில் உன் நம்பிக் கையை வைப்பாய்.

சங்கீதங்கள் 145:3

அவர்களுடைய ஆவி பிரியவே, அவர்கள் தாங்கள் உருவான மண் ணுக்குத் திரும்புவார்கள்; அந்நாளிலே அவர்களுடைய எண்ணங்கள் யாவும் அழிந்துபோம்.

சங்கீதங்கள் 90:2

அவன் கர்த்தரை நோக்கி: நீரே எனக்கடைக்கலம்; நீரே எனக்காதரவு என்று சொல்லுவான்; அவரே எனக் குத் தெய்வம்; அவரிடத்தில் நான் நம்பிக்கை வைப்பேன்.